# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 123/2020 நாள்.17.04.2026

PW1- திரு. முருகானந்தம், த/பெ. திரு. செல்லையன்

வாதிகள் தரப்பில் மனுவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கபட்டு சத்திய பிரமாணம் செய்யபட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அசல் வழக்கு எண் 29/2011 என்று தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.ரமேஷ் மனைவி சிங்காரவள்ளியை தெரியுமா என்றால் தெரியும். சிங்காரவள்ளிக்கு எதிராக அப்பர், ஆர் சபாநாயகம், சிவபிரகாசம் ஆகியோர் வாடகை கட்டுபாட்டு வழக்கு எண் 16/2018 போட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு சிங்காரவள்ளி அதிகாரம் கொடுத்தார் என்றால் ஆமாம். நான் அந்த அதிகார பத்திரம் வைத்துள்ளேனா என்றால் அந்த சொத்தை நான் சுவாமிநாதன் என்பவருக்கு விற்றுவிட்டேன் அவரிடம் ஆவணம் கொடுத்துவிட்டேன். நான் அந்த வழக்கை நடத்தினேன் என்றால் இல்லை. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புகள் என்னிடம் காண்பிக்கபடுபவை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான்தான் சிங்காரவள்ளிக்காக வழக்கை நடத்தினேன் என்றும் அதுவிபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பவர் வாங்கி பஞ்சாயத்து செய்வது என்னுடைய வேலை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது சிங்காரவள்ளி எனக்கு கொடுத்த பொது அதிகார பத்திர நகல் என்றால் ஆமாம். அது **பி.சா.ஆ. 3** ஆகும்.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.17 17:06:05 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**